# நாம் பேசவேண்டும்! எழுதவேண்டும்!! வாழ வேண்டும்!!

ஸ்ரீலங்காப் பேரினவாத அரசால் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பலவந்தமாகப் போராடிப் பெற முற்பட்ட வரலாற்றின் பிரசவமே எமது தேச விடுதலைப் போராட்டம். இந்த உலகின் எத்தனையோ சின்ன சிறு உயிரினமும் தான் வாழும் சூழலோடு போராடித்தான் உயிர்வாழ்கின்றது. உயிர் வாழ வேண்டுமென்றால் போராடியாக வேண்டும். இது பொது நியதி. உயிர் வாழ்க்கைக்கு உத்தரவாதமற்ற நிலைமை உருவாகிய போது அந்த எதிரிகளுக்கெதிராக மக்கள் விரோத சக்திகளுக்கெதிராக நாம் போராடி வந்தோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழகம் தன்னாலான பணிகளை செய்துவந்துள்ளது.

எந்த மக்களின் உரிமைக்காகவும், எந்த மக்களின் சுதந்திர வாழ்வுக்காகவும் நாம் மாணவர்கள் என்ற எல்லைக்குள் நின்று போராடி வந்தோமோ அந்த உரிமைகளும் அந்த சுதந்திரமும் இன்று கேள்விக்குறியாக மாற்றப்படுகின்றன. மாணவர் **விஜிதரன்** விடுவிக்கக் கோருவதன், அதற்காகப் போராடுவதன் நோக்கம் விஜிதரன் என்கின்ற ஒரு தனி மனிதனைப் பாதுகாப்பதற்கல்ல. விஜிதரன் ஒரு தனி மனிதன் தன் வயிற்றுப்பசிக்கு உணவும் தன் அன்றாட சுய தேவைகளோடும் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதன் என்றால் அவர் கடத்தப்பட்டிருக்க மாட்டான். ஜனநாயகத்தின் பேரில் அவன் கொண்டிருந்த கருத்துக்கள், மாணவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் அவன் ஆற்றிய பங்கு... ......... ... ........ போன்ற விடயங்கள் இவனது கடத்தலுக்கு பின்னணியில் இருக்கின்றன. இங்கே தான் விஜிதரன், ஒரு வெறும் தனி மனிதனாக அல்லாது ஒரு அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டு அதற்காக செயல்பட்ட, போராடிய மனிதனாகின்றார். இதனாலேயே அவர் கடத்தப்பட்டுள்ளார்.

## இது சரியானதா ? இது நியாயமானதா ? இது அனுமதிக்கக் கூடியதா ?

வாய் சாப்பிடுவதற்காக மட்டும் இருப்பதாக சிலர் சொல்லுகிறார்கள். வாய் பேசுவதற்காகவும் இருக்கிறது இந்த இயற்கை மூளையில் பிரதிபலிப்பதை அதனால் உருவாகும் கருத்தை ஒவ்வொரு மனிதனும் தன் வாயால் வெளிப்படுத்துகின்றான். அப்படிச் செய்யாதே ''பேசாமல் சாப்பிட்டுக் கொண்டு மட்டுமிரு அல்லது வெளிநாட்டுக்குப் போ'' என்று சொல்வது ஜனநாயக விரோதமானது மட்டுமல்ல இயற்கையாகவே விரோதமானது.

விஜிதரன் கடத்தப்பட்டமையை அனுமதிப்பது மாணவர்களாகிய நாம் வெறும் சதைப்பிண்டங்களாகச் சாப்பாட்டு ராமன்களாக இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். அன்பார்ந்த மக்களே ! விடுதலை ஸ்தாபனங்களே ! விஜிதரனைக் கடத்திய வீரர்களே ! பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் சாப்பாட்டு ராமன்கள் அல்ல என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது போராட்டம் சர்வதேச பிற்போக்கு சக்திகளினால் மழுங்கடிக்கப்படக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கி இருக்கும் இவ்வேளையில் எமது போராட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாட்டை மாணவர்கள் ஆகிய நாம் என்றும் மறந்து போனதில்லை. நாம் போராடுவது நமக்கொரு தேசமும், அதற்கான விடுதலையும் அவசியப்படுவது எமது மக்களின் அதன் மேல் வேறு பிரச்சனைகளின் ஜனநாயக உரிமைகளும், அவர்கள் உயிர்வாழ்வதற்கு வேண்டிய அடிப்படை மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். தமது சொந்த தாயகத்தில் சுதந்திர புருஷர்களாக தன் மானமிக்க மனிதர்களாக நாம் வாழ வேண்டும் என்பதற்காகவே.

இத்தகைய சுதந்திர வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் நேரும் போது அதற்கெதிராக போராட வேண்டியது எமது பிரதான கடமையாகின்றது. அதையே செய்து கொண்டிருக்கின்றோம். இப்போதெல்லாம் அரசியல் காரணங்களுக்காக மாணவர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

விஜிதரன் விவகாரம் இவ்வளவு தான். காணாமல் போன விஜிதரன் கண்டுபிடிக்க தேடுதல் வேட்டை நடத்தியவர்களிடமிருந்து தகவல்கள் எதுவுமில்லை. அதனால் சக மாணவர்கள் நாம் சாகப்போகின்றோம்.............................. எமது அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக சின்ன பிரச்சனையை பெரிது படுத்துவதாக சில குரல்கள் முணுமுணுப்பதும் நமக்குக் கேட்டுத்தானிருக்கிறது. எமக்கு தெரியும் அடிப்படை ஜனநாயக உரிமைகளை குழி தோண்டிப் புதைப்பது அராஜக வாதிகளுக்கு எப்போதுமே சின்ன விசயம்தான்.

யாழ். பல்கலைக்கழகம் ஒரு பாரிய கல்வி நிறுவனம். பெருந்தொகையான மாணவர்களை ஒரு அமைப்புக்குள் கொண்டுள்ள ஸ்தாபனம். தனக்குக் கீழ் நூற்றுக்கணக்கான பாடசாலைகளை அதன் மாணவர்களை அணி திரட்டக் கூடிய ஸ்தாபனம். கடந்தகாலப் போராட்டங்கள் மூலம் அதை நிரூபித்த ஸ்தாபனம்.

இதன் பல்கலைக்கழகத்திலுள்ள விஜிதரனுக்கு இந்த நிலைமையென்றால் அப்பாவி பொது ஜனங்களுக்கு என்ன கதி ! ஸ்ரீலங்காப் பேரினவாத அரசின் தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கெதிராக போராடும் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல அராஜக வன்முறைகளுக்கெதிராகவும் போராடியே தீருவோம்.

**எமக்கு விஜிதரன் வேண்டும் !**

**எமக்கு ஜனநாயகம் வேண்டும் !**

**நாம் பேசவேண்டும் ! எழுத வேண்டும் ! வாழ வேண்டும் !**

**எல்லாத்துக்குமாக நாம் போராடித்தான் ஆக வேண்டும்.**

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

# அராஜகத்துக்கு மூளையே இல்லை.

முன்னேறுங்கள்
போர் முனையில் !
மூளையை சலவை செய்து
முகங்களில் மூர்க்கத்தோடு
விழிகளை மேலே தூக்கி
கால்களின் வலிமையோடு
போர் முனையில்
முன்னேறுங்கள் !

நெருப்புக் கொள்ளியுடன்
என் அப்பன் சொல்கிறான்
''ஆமி சுடுகிறான்
அடுப்புச் சுடுவதையிட்டு
அலட்டிக் கொள்ளாதே''
எதிர்த்துப் போரிடுவதைத் தவிர
என் தாய்க்கு
வேறு வழியில்லை !

குருட்டுத் துப்பாக்கி குரல்வளையை
குறிபார்க்கும்
மிரட்டல் தொலைபேசிகள்
மிச்சத்துக்கு அறிக்கைகள்
ஆனாலும் நாம் வாழ்ந்தாக
வேண்டும் !
போர் முனையில்
முன்னேறுங்கள் !

மரப்பிடிக்கும்
இரும்புக் குழாய்க்கும்
மனிதாபிமானம்
இருக்க நியாமில்லை
அதற்காக
மனிதத் தோலுக்குமா.... ...?

மனிதத்தை தோற்கடிக்க
மரணத்தால் முடியாது
முன்னேறுங்கள்

இருப்புக்காகவே
எல்லாம் நடக்கிறது !

இருப்பைத் தேடியே
இயக்கம் இருக்கிறது !

வரி விதிக்கப்பட்ட
வாயோடு
புதை குழிகளைப்
புன்னகையோடு வரவேற்போம் !

சுரங்கத்தில்
தங்கமிருக்கலாம்
என்று
கரங்களில் விலங்கோடு
நடக்க
நமக்குச் சம்மந்தமில்லை !

விழிகளைத் தருவேன்
தாயகத்துக்கென்றவனை
விலங்கிட்டுக் கொன்றது
அநியாயம்.........கொடுமை
என்றால்
விஜிதரனைக் காணவில்லை
என்பதற்கு
விளக்கம் என்ன வேண்டிக் கிடக்கிறது !
முன்னேறுங்கள் போர் முனையில்

அராஜகத்துக்கு மூளையே இல்லை
அதனால்
மூலைக்கு மூலை
மக்கள் முணுமுணுப்பது
அதற்கு விளங்கவேயில்லை !
விவாதத்திற்கிடமின்றி
ஒன்று மட்டும்
உண்மை !
விலங்குகளோடு வாழ
மக்கள் விரும்பமாட்டார்கள்
விளங்குதா?
முன்னேறுங்கள் போர் முனையில்!